**<u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No.. 70/2022 தேதி- 25.02.2026

(P.W.1) . கிறிஸ்டோபர் மோசஸ்

**<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான்இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தங்கை எனக்கு கொடுத்த சொத்தை எனக்கு வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பாவிற்கு எத்தனை சென்ட் உரிமைப்பட்டது என்றால் 55 சென்ட். மேற்படி 55 சென்ட் எனது அப்பாவிற்கு உண்டு என்பதைக் காண்பிக்க ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது அப்பாவிற்கு உள்ள ஆவணம் என்ன வகை ஆவணம் என்று எனக்கு தெரியுமா என்றால் எனது அப்பாவிற்கு நீதிமன்றத்திலிருந்து வழங்கப்பட்ட தீர்ப்பாணை இருக்கிறது. என் அப்பாவிற்கு 55 சென்ட் கிடைக்கவில்லை. என் அப்பாவிற்கும் அவரது வாரிசுகளான எங்களுக்கும் 55 சென்ட் கிடைக்கப்பெற்றது. எனக்கு எந்த உரிமையும் மேற்படி 55 சென்டில் கிடைக்கவில்லை.

என் அப்பாவிற்கு கிடைத்த பங்கை யாருக்கு உரிமை மாற்றம் செய்தார் என்றால் எனது தங்கைக்கு உரிமை மாற்றம் செய்தார். மேற்படி ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ. 2 ஆவணங்களின் சான்றிட்ட தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ 2 க்கான அசலை நான் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ. 2 க்கான அசல் ஆவணம் வங்கியில் அடமானமாக வைத்திருக்கிறேன்.

எனது சொத்திற்கு எந்த பகுதியில் டேவிட்சன் என்பவரின் சொத்து உள்ளது என்றால் மேற்கு பக்கம் உள்ளது. டேவிட்சனுக்கு எவ்வளவு சென்ட் உரிமைப்பட்டது என்றால் 5 சென்ட் உரிமையிருந்தது. அதை எனக்கு எழுதி தருவதாக கூறியிருந்தார். மேற்படி சொத்தை யாருக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் டேவிட்சன் அவரது சொத்தை யாருக்கும் எழுதிக்கொடுக்கவில்லை. டேவிட்சன் ஆவண எண் 666/2018 ன்படி இந்த வழக்கின் 2 ஆம் பிரதிவாதிக்கு ஆவணம் எழுதியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சொல்லவில்லை.

இந்த வழக்கில் சுலோச்சனா என்பவரை 1 ஆம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதிக்கு டேவிட்சன் 2 1/2 சென்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் எழுதிக்கொடுக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண எண் 2957/2015 டேவிட்சன் 1 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணமா என்றால் இல்லை. வா.சா.ஆ-1 ஆவணத்தின் எல்கையில் டேவிட்சன் மனைக்கு கிழக்கு என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 2 ஆவணத்தில் தெற்கு சுலோச்சனா வகை மனைத்தரை என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய சொத்தின் எல்கையில் டேவிட்சன் சொத்தும் சுலோச்சனா சொத்தும் உள்ளது என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதியின் சொத்தை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**